MC.16/2025

05.05.2026

RW3 – சக்திவேல், த/பெ.நாசி, வயது–50

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர் .

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் –11.20 A.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –11.30 A.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 05.05.2026

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

மனுதாரர் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது தங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1–ம் மனுதாரர் எதிர்மனுதாரரின் மனைவி எனவும், 2 மற்றும் 3–ம் மனுதாரர் 1–ம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் குழந்தைகள் என்று சொன்னால் சரிதான். எதிர்மனுதாரர் மனுதாரர் மற்றும் 2,3–ம் மனுதாரர்களை விட்டு பிரிந்து எவ்வளவு நாட்கள் ஆகிறது என்றால் ஏழு வருடங்கள் ஆகிறது. கடந்த ஏழு வருடங்களில் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு ஜீவனாம்சம் ஏதேனும் கொடுத்து வந்தாரா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் எங்கு வேலை செய்கிறார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தாமோதரன் ஓட்டலில் சமையல் மாஸ்டராக வேலை செய்து வருகிறார். எதிர்மனுதாரர் மாதம் ரூ.30,000/– வருமானம் ஈட்டி

வருகிறாரா என்றால் இல்லை. எதிர்மனுதாரருக்கு ஏலகிரி மலையில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தகப்பனார் பெயரில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து உள்ளது எனவும் மாதம் ரூ.30,000/- எதிர்மனுதாரர் சம்பாதித்து வருகிறார் எனவும் மனுதாரர்களுக்கு ஜீவனாம்சம் வழங்க எதிர்மனுதாரர் கடமைப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.05.05 17:16:33 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.